## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................... மாவட்டம்........................................................

கிராமம்........................................................... தந்தை /கணவர் பெயர்...........................................

தாலுக்கா........................................................... தொழில்.................................................................

---------------------------------------------------------------------------------------------------------

LAOP No. 806/2024 batch of 8 cases

# 29.01.2026

**எ.ம.த.சா.1 - திரு. சகாரியா டேனியல், த/பெ. சாமுவேல் ராஜ்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு வட்டாட்சியராக சென்னை எல்லை சாலை திட்டத்தில் அலகு-2ல் பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் ஆவணங்கள் எதுவுமில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சென்னை எல்லை சாலை திட்டத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட புன்னப்பாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் தேசிய நெடுஞ்சாலை 716-B உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் பதாஞ்சலி நிறுவனமுள்ளது என்றால் சரிதான். ஆர் ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் SAMS Marine Engineering கல்லூரி உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட புன்னப்பாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் வெங்கல் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் சிறுவாபுரி

முருகன் கோவில் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் பெரியபாளையம் பவானியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் L&T சிமெண்ட் நிறுவனம் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் தேர்வாய் கண்டிகை சிப்காட் உள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யபட்ட அத்திவாக்கம் கிராமத்திலிருந்து 1.6 கி.மீ தொலைவில் ஆரணி பேரூராட்சி உள்ளது என்றால் சரிதான். புதிய நில எடுப்பு சட்டத்தின் எந்த விதிமுறைகளையும பின்பற்றாமல் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட புன்னப்பாக்கம் மற்றும் அத்திவாக்கம் கிராமங்கள் மிகவும் வளர்ச்சியடைந்த பகுதிஎன்பதால் அதிகமாக இழப்பீடு கோரிக்கைதார்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.